சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No.15/2024

பெயர். திருமதி. சங்கீதா நாள் 22.07.2026
க/பெ. விஜி

**<u>மனுதாரர்கள் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்தை பற்றி தெரிந்து கொண்டேன். என் கணவர் கட்டிட வேலை செய்து வந்தார். என் வீட்டு அருகில் இருந்தவர்கள் விபத்து பற்றி கூறியது வைத்து நான் புகார் அளித்துள்ளேன். கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்தால் தான் விபத்து பற்றி தெரிய வரும் என்றால் சரிதான். வேறு ஒரு வாகனம் என் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெவ்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகைகள் மிகஅதிகம் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நாங்கள் குடியிருக்கும் வீடு தேசிய நெடுஞ்சாலைக்கு கிழக்கு திசையில் உள்ளது. என் கணவர் செல்ல முற்பட்டதாக மோச்சேரி கிராமம் தேசிய

நெடுஞ்சாலைக்கு மேற்கு திசையில் உள்ளது. சாலையை கடந்து தான் மோச்சேரி கிராமத்திற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். எங்கள் ஊரில் இருந்து மோச்சேரி கிராமம் வருவதற்கு வழி உள்ளது என்றால் சரிதான். என் கணவர் சாலையை கடக்கும்போது விபத்து வரவழைத்துக் கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர் தான் முழு காரணம் என்றால் சரியல்ல. எனவே எதிர்மனுதாரர்கள் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கேட்டுள்ள தொகைகள் மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் தொழில் மற்றும் வருமானத்தை எண்பிக்க ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காளான் நிறுவனத்தில் வேலை செய்து மாதம் ரூ.9,000/– வருமானம் பெறுகிறேன். எனவே நான் இழப்பீடு கோர இயலாது என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.8 ல் சாலையின் நடுவே விபத்து ஏற்பட்டதாக குறிப்புள்ளது என்றால் சரிதான். என் கணவரின் கவனயின்மையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை